**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.**

**2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் நாள்**

**C.C.NO. 151/2014**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் (கூ.மு.பொ) திரு. கி.சக்திவேல், பி.காம். பி.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.விஜய்ஸ்ரீ | வயது | : | |
| த.பெ. | : | திரு.தினகர்ராவ் | தொழில் | : | |
| ஊர் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | மதம் | : | |
| காவல் நிலையம் | : | | நிலை | : | P.W.27 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 20.01.2023**

**அரசு தரப்பில் முதல் விசாரணை –** நான் தற்பொழுது டாடா டெரி சர்வீஸில் நோடல் ஆபிசராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 27.05.2014ம் தேதி கடலூர் குற்ற பிரிவு போலிசார் 8148998879 என்ற கைப்பேசி எண்ணிற்கான 01.09.2013 முதல் 27.05.2014 வரையிலான அழைப்பு விவரங்களை (Call details) கேட்டு வேண்டுகோள் கடிதம் மின்அஞ்சல் மூலமாக அனுப்பினார்கள். அதன் பெயரில் அதற்கான அழைப்பு விவரங்களை நான் மின் அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் மின் அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்த அழைப்பு விவரங்கள் ஆகும். அதன் Tower Address TNEB, Sub-station No.1, Rajaji Salai, Beach Road, Chennai என்ற Aircel நிறுவனத்தின் டவரிலிருந்து காண்பித்தது. நாங்கள் அப்போது Aircel நிறுவனத்துடன் Tower Sharing வைத்திருந்தோம். **நான் மின் அஞ்சல் மூலமாக அனுப்பிய 8148998879 என்ற கைப்பேசி எண்ணிற்கான அழைப்பு விவரங்கள் அ.சா.ஆ.85 ஆகும்.** காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** போலிசார் என்னை நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போன் மூலமாகதான் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிசார் யார், அவர் பெயர், பதிவு போன்ற விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

**3,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை .

சாட்சி சொல்ல சொல்ல, எதிரிகள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டியபின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.

**ஓம்/திரு.கி.சக்திவேல்,பி.காம்.,பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், பரங்கிப்பேட்டை(கூ.மு.பொ.)